மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரம், நிர்வாகம் மற்றும் நிதி பங்களிப்பு – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும் சில திட்டங்கள் – மாற்றியமைத்தல்.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந.3) துறை

அரசாணை (நிலை) எண்.93 நாள் 23.11.2007

படிக்கப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர் கடித எண்.சி2/4992/2007, நாள் 5.10.2007.

**ஆணை**

மூன்றடுக்கு உள்ளாட்சிகளுக்கு அதிகார, நிர்வாக மற்றும் நிதி பங்களிப்பு வழங்குவது தொடர்பாக ஆய்வு செய்து பரிந்துரை வழங்குவதற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

2. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பங்களிப்பு செய்வது தொடர்பான இக்குழுவின் கூட்டம் 11.10.07 அன்று நடைபெற்றது.

3. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகார பங்களிப்பு அளித்து அரசு ஆணையிடுகிறது.

i. இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் முறையான மற்றும் திறமையான நிர்வாகத்தினை உறுதி செய்வதற்காக அவற்றை ஆய்வு செய்யும் அதிகாரப் பங்களிப்பினை பஞ்சாயத்து தலைவர்களுக்கு வழங்கப்படுகிறது.

ii. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் இன மக்களுக்கு இலவச பட்டா வழங்க நிலங்களை தெரிவு செய்வது மற்றும் அதற்கான பயனாளிகளை தெரிவு செய்ய பஞ்சாயத்து தலைவர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்கப்படுகிறது. எனினும் பயனாளிகளின் பட்டியலும் மற்றும் தேர்வு செய்யப்பட்ட நிலத்தின் தகுதியும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரால் சரிபார்க்கப்படும்.

iii. இலவசக் கருவிகள் வழங்கும் திட்டத்திற்கான பயனாளிகளின் பட்டியலை பஞ்சாயத்து தலைவர்கள் தேர்வு செய்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு அனுப்ப அனுமதிக்கப்படுகிறது. எனினும் இலவசக் கருவிகள் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையில் வழங்கப்படுவதால், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அப்பட்டியலை முழுமையாக ஆய்வு செய்து அதிலிருந்து தகுதியுள்ள பயனாளிகளை தேர்வு செய்யலாம்.

4. மேற்கண்ட முடிவுகள் தொடர்பாக மாவட்ட பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகளை அளிக்குமாறு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ந. வாசுதேவன்**
அரசு செயலாளர்